**செய்தி வெளியீடு எண் : 610** **நாள் : 25.03.2023**

**செய்தி வெளியீடு**

**மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் நீதிபதி டாக்டர் டி.ஒய். சந்திரசூட் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (25.03.2023) மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் நீதிபதி டாக்டர் டி.ஒய். சந்திரசூட் அவர்கள் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து, மாண்புமிகு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு அவர்கள் மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை திறந்து வைத்தார்.

நீதித்துறையின் செயல்பாடுகள் மாநிலத்தில் சிறப்பாக நடைபெறும் வகையிலும், பொதுமக்களுக்கு விரைந்து நீதி வழங்குதலை உறுதி செய்யும் வகையிலும், நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டட வசதிகள், மனித ஆற்றல், பிற உட்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதில் தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

**மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டடங்கள்**

மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் மொத்தம் 3,38,968 சதுர அடி பரப்பளவில் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் நீதிமன்ற கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. இப்புதிய நீதிமன்ற கட்டடத்திற்கு மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் நீதிபதி டாக்டர் டி.ஒய். சந்திரசூட் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நீதிமன்ற கட்டடத்தின் அடித்தளத்தில் வாகன நிறுத்துமிடங்கள், தரைத்தளத்தில் நீதிபதி மற்றும் பொதுமக்கள் நழைவுவாயில்கள், மருந்தகம், வங்கி, அஞ்சலகம் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள், முதல் தளத்தில் நீதிமன்ற அரங்குகள், தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் மேலாளர் அறை, சாட்சிகள் அறை மற்றும் குழந்தைகள் காப்பறை, இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களில் நீதிமன்ற அரங்குகள், வழக்கறிஞர்கள் அறைகள், சட்டஉதவி அறைகள், காணொலி கூட்ட அரங்கு, பதிவுருக்கள் அறைகள் ஆகியவை கட்டப்படவுள்ளன. மேலும், மின்தூக்கிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு நடைப்பாதை வசதிகள், தானியங்கி தீயணைப்பு வசதிகள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

**மயிலாடுதுறை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

2021-22ஆம் ஆண்டிற்கான நீதி நிருவாக மானியக் கோரிக்கையில், மயிலாடுதுறையில் தற்போது இயங்கி வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும் என்றும், மயிலாடுதுறையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மயிலாடுதுறையில் 20 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து, மாண்புமிகு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு அவர்கள் மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை திறந்து வைத்தார்.

இந்த விழாவில், மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் நீதிபதி திரு. வி. ராமசுப்பிரமணியன், நீதிபதி திரு. எம்.எம். சுந்தரேஷ், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் (பொறுப்பு) நீதிபதி திரு. டி. ராஜா, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் நீதிபதி மகாதேவன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி. இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தளபதி, திரு. பூமிநாதன், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. எஸ். அனீஷ் சேகர், இ.ஆ.ப., அரசு தலைமை வழக்கறிஞர் திரு. ஆர். சண்முகசுந்தரம், சென்னை உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர் திரு. பி. தனபால், வழக்கறிஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in